

# சங்கொலி



'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு'

ஆசிரியர் : வைகோ

திருவள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 20 மலர் 29 இதழ் 18 SANKOLI 03.05.2024 16 பக்கங்கள் விலை ரூ 10 Volume 29 Issue 18


## தேர்தல் ஆணையம் சென்று வாக்குரிமையை மீட்ட மதுரை மகபூப்ஜான்



மக்களவைத் தேர்தலுக்கான வரைவு வாக்காளர் பட்டியலில் இருந்த பெயர், இறுதிப் பட்டியலில் நீக்கப்பட்ட நிலையில், இந்திய தேர்தல் ஆணையம் வரை சென்று போராடி வாக்குரிமையைப் பெற்று வாக்களித்துள்ளார் மதுரை மகபூப்ஜான்.

மதுரை மேற்கு பொன்னகரம் 4 ஆவது தெருவைச் சேர்ந்தவர் மகபூப்ஜான் (72). கழக ஒழுங்கு நடவடிக்கைக் குழு உறுப்பினராகவும் - மதிமுக தொழிற்சங்க மாநில இணைப் பொதுச் செயலாளராகவும் - தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் இருக்கின்ற மதுரை மகபூப்ஜான் கடைசியாக நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தல் வரை அனைத்துத் தேர்தல்களிலும் வாக்களித்து வந்துள்ளார்.

இந்நிலையில், மதுரை மக்களவைத் தொகுதியின் வரைவு வாக்காளர் பட்டியல் ஜனவரி 22 ஆம் தேதி வெளியிடப்பட்டது. அதில் மகபூப்ஜான் பெயர் இருந்துள்ளது. ஏப்ரல் 5ஆம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் அவரது பெயர் நீக்கப்பட்டுள்ளது. இதனால் மகபூப்ஜானுக்கு பூத் சிலிப் வழங்கப்படவில்லை. ஆனால் இறந்துபோன அவரது மனைவி பெயரில் பூத் சிலிப் வழங்கப்பட்டிருக்கிறது.

அப்போதுதான் இறுதி வாக்காளர் பட்டியலில் தனது பெயர் நீக்கப்பட்ட விவரம் இவருக்குத் தெரிய வந்துள்ளது.

இதையடுத்து, மதுரை மக்களவைத் தொகுதி தேர்தல் அதிகாரியான மாவட்ட ஆட்சியரை தொடர்புகொண்டு விவரத்தைத் தெரிவித்துள்ளார். மாவட்ட ஆட்சியர் அதிகாரிகளிடம் இதுகுறித்து கேட்குமாறு கூறியுள்ளார். இதன்பின் அதிகாரிகளைச் சந்தித்தும் பலனில்லாத நிலையில், தமிழ்நாடு தேர்தல் ஆணையருக்கு புகார் அனுப்பினார். அங்கும் உரிய பதில் கிடைக்கவில்லை.

தேர்தலுக்கு இரண்டு நாள்கள் இருக்கும் நிலையில், தலைமைத் தேர்தல் ஆணையருக்கு மின்னஞ்சல் மூலம் புகார் கடிதம் அனுப்பினார். இப்புகாரின் பெயரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேர்தலுக்கு முதல் நாளான ஏப்ரல் 18 ஆம் தேதியன்று தலைமை தேர்தல் ஆணையத்திலிருந்து ஏப்ரல் 19 ஆம் தேதி வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்குமாறு தகவல் வந்துள்ளது. அதன் அடிப்படையில் காலையில் வாக்குச் சாவடிக்குச் சென்ற மகபூப்ஜானுக்கு தேர்தல் அலுவலர்கள் ராஜ மரியாதை அளித்துள்ளனர். பின்னர் அவர் வாக்குரிமையை செலுத்திவிட்டு மகிழ்ச்சியுடன் திரும்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்:- வாக்காளர் பட்டியலில் இருந்து என் பெயரை நீக்கக் கோரி நான் மனு அளிக்கவில்லை. என் பெயர் நீக்கப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்ட என் தொலைபேசி எண்ணுக்கு எந்தக் குறுஞ்செய்தியும் வரவில்லை. இருப்பினும் என் பெயர் நீக்கப்பட்டுள்ளது.

நூறு சதவிகித வாக்களிப்பை வலியுறுத்தி தேர்தல் ஆணையம் பல்வேறு வழிகளில் விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியது. அப்படியிருக்கும்போது, காரணம் இல்லாமல் வாக்காளர்களின் பெயர்களை நீக்கினால் நூறு சதவிகித வாக்குப் பதிவு எப்படிச் சாத்தியமாகும்?

என் கோரிக்கையை தேர்தல் ஆணையத்துக்குத் தெரிவிக்க வழக்கறிஞர்கள் ஹென்றி திபேன், சத்தியமூர்த்தி ஆகியோர் உதவினர். இந்தியத் தேர்தல் ஆணையம் விரைந்து நடவடிக்கை எடுத்து, எனது வாக்குரிமையை மீட்டுக் கொடுத்துள்ளது. இதற்காக தேர்தல் ஆணையத்துக்கு நன்றி தெரிவிக்கிறேன் என்றார் மகபூப்ஜான். ●